


**23. 10. 2025**

தலைப்பு செய்திகள்

1. வளர்ச்சியடைந்த பாரத இலக்கை எட்ட விளிம்பு நிலை மக்களுக்கு உரிய வாய்ப்புகள் கிடைப்பதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. கப்பல் கட்டுமானத்தையும், கடல்சார் பாதுகாப்பையும் வலுப்படுத்த மத்திய அரசின் முயற்சிகள் வளர்ச்சிக்கான உத்வேகத்தை பிரதிபலிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

3. தூத்துக்குடி மாவட்டத்தில் பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களின் உற்பத்தியால் அப்பகுதி வளர்ச்சிப்பெறும் என்று மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் கூறியுள்ளார்.

4. சேந்தமங்கலம் சட்டப்பேரவை திமுக உறுப்பினர் பொன்னுசாமி மாரடைப்பால் இன்று காலமானார்.

5. அடிலைடில் இந்தியாவிற்கு எதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றிபெற 265 ரன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

சமுதாயத்தின் அனைத்து பிரிவினருக்கும் சமவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் ஆளுநர் மாளிகையில் முன்னாள் குடியரசுதலைவர் கே.ஆர்.நாராயணனின் திருவுருவச்சிலையை இன்று திறந்து வைத்து பேசியஅவர், வளர்ச்சியடைந்த பாரத இலக்கை எட்ட விளிம்பு நிலை மற்றும் ஏழை எளிய மக்களுக்கு உரிய வாய்ப்புகள் கிடைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்.

நேர்மை, பரிவு, ஜனநாயக உணர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய கலாச்சாரத்தை கே.ஆர்.நாராயணன் விட்டுச்சென்றதையும் அவர் சுட்டிக்காட்டினார். சமூகத்தின் வளர்ச்சிக்கு கல்வியே அடித்தளம் என்ற கே.ஆர்.நாராயணனின் கூற்றை குடியரசு தலைவர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖

பிரதமர்

நாட்டின் கப்பல் கட்டுமானத்தையும், கடல்சார் பாதுகாப்பையும் வலுப்படுத்த மத்திய அரசு ஒதுக்கியுள்ள 8 பில்லியன் டாலர் நிதியுதவி வளர்ச்சிக்கான நமது உத்வேகத்தை பிரதிபலிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

கப்பல் கட்டுமானம் தொடர்பான மத்திய அமைச்சர் திரு.சர்பானந்த சோனோவாலின் கட்டுரையை சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர், தொழில் கட்டமைப்பு அடித்தளத்துடன் இந்தியாவில் தயாரிப்போம் இயக்கம் மூலம் நவீன துறைமுகங்களை உருவாக்கும் முயற்சிகளை இக்கட்டுரை எடுத்துரைப்பதாக குறிப்பிட்டார்.

அடுத்த தலைமுறைக்கான சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் வாகன ஏற்றுமதி இந்த ஆண்டு 31.4 லட்சம் அலகுகளாக அதிகரித்து சாதனை படைத்திருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

பிரதமர் தொடர்ச்சி

மலேஷியா தலைநகர் கோலாலம்பூரில் வரும் 26-ம் தேதி தொடங்கவுள்ள 47-வது ஆசியான் உச்சிமாநாட்டில் பிரதமர் திரு.நரேந்திரமோடி காணொலி மூலம் பங்கேற்கிறார்.

ஆசியான் தலைமை பொறுப்பை ஏற்றுள்ள மலேஷிய பிரதமர் அன்வர் இப்ராஹீமுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள பிரதமர், ஆசியான் உச்சிமாநாடு வெற்றிபெற வாழ்த்தியுள்ளார்.

இந்தியா – ஆசியான் உறவுகள் மேம்படுவதற்கான தமது ஆதரவை தெரிவித்ததோடு, விரிவான அரசியல் பங்களிப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்தார்.

பிரதமர் இன்றுமாலை பீஹார் மாநில பி.ஜே.பி. மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி தொண்டர்களிடையே காணொலி மூலம் கலந்துரையாடுகிறார்.

இதனிடையே மகா கூட்டணிசார்பில் முதலமைச்சர் வேட்பாளராக ராஷ்ட்ரிய ஜனதாதள் தலைவர் திரு. தேஜஸ்வி பிரசாத் யாதவ் அறிவிக்கப்பட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**கீதாஜீவன்**

**தூத்துக்குடி மாவட்டத்தில் பனை சார்ந்த** மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை தயாரித்து விற்பனை செய்தால் பனைத்தொழில் மேம்படும் என்று மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

வேம்பாரில் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் மதிப்பு கூட்டப்பட்ட பனை பொருட்கள் உற்பத்திக்கான கட்டடத்திற்கு இன்று அடிக்கல்நாட்டி பேசியஅவர், தரமான கருப்பட்டி உற்பத்தி செய்வதோடு, பனங்கற்கண்டு பதநீர் போன்றவற்றை பதப்படுத்தி பாக்கெட்டில் அடைத்து விற்பனை செய்வதன் மூலம் அனைவரும் பயன்பெற முடியும் என்றார்.

இதன்மூலம் பனைத்தொழில் முன்னேற்றம் அடைவதோடு அப்பகுதியும் வளர்ச்சியடையும் என்றார்.

இதனைத்தொடர்ந்து சீறாப்புராணம் இயற்றிய உமருபுலவர் பிறந்த தினத்தை முன்னிட்டு எட்டய புரத்தில் உள்ள அவரது மணிமண்டபத்தில்

அமைந்துள்ள தர்காவில் அமைச்சர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இளம்பகவத் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டார்.

❖❖❖❖❖❖❖

**பொன்னுசாமி மறைவு**

**நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம்** சட்டப்பேரவை தொகுதி திமுக உறுப்பினர் பொன்னுசாமி மறைவிற்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அன்னாரது மறைவு அத்தொகுதி மக்களுக்கும், தி.மு.க-விற்கும் பேரிழப்பாகும் என கூறிய முதலமைச்சர், அவரது குடும்பத்தினருக்கும் ஆறுதல் தெரிவித்தார்.

தற்போது நடுக்கோம்பை ஊராட்சி புளியங்காடு கிராமத்தில் பொதுமக்கள் பார்வைக்காக பொன்னுசாமியின் உடல் வைக்கப்பட்டுள்ளது.

கொல்லிமலை வட்டம் சோளக்காடு பகுதியை சேர்ந்த பொன்னுசாமி 2006, 2021 சட்டமன்ற தேர்தல்களில் சேந்தமங்கலம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவார்.

முன்னதாக இன்றுகாலை உடல்நலக்குறைவு காரணமாக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 74.

❖❖❖❖❖❖❖

**வானிலை**

**வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த** காற்றழுத்த தாழ்வு பகுதி, தற்போது காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவிழந்து வடக்கு உள் தமிழகம் மற்றும் தெற்கு உள் கர்நாடகத்தில் நிலை கொண்டுள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இது அடுத்த 24 மணிநேரத்தில் மேலும் வலுவிழக்க கூடும் என இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖

**திருவண்ணாமலை வாய்ஸ்**

**திருவண்ணாமலை மாவட்டத்தில் செண்பகத்தோப்பு** அணை நிரம்பி உபரிநீர் திறக்கப்பட்டுள்ளதால் நாகநதி, கமண்டலநாகநதி கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**கன்னியாகுமரி**

**கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர்மழை** காரணமாக பிரதான அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

தாமிரபரணி, பரளியாறு, கோதையாற்றில் தண்ணீர் கரைபுரண்டு ஓடுகிறது.

குழித்துறை சப்பாத்து பாலத்தில் போக்குவரத்திற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பேச்சிப்பாறை, பெருஞ்ஞாணி அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

❖❖❖❖❖❖❖

**மழை**

திருவாரூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் பேரிடர்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் திரு.ஆனந்த் இன்று ஆய்வு செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**கிருஷ்ணராஜ சாகர் அணையிலிருந்து 40 ஆயிரம்** கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் ஒகேனக்கல் காவிரி கரையோர பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சேலம் மேட்டூரில் கடந்த 2 நாட்களாக பெய்த கனமழை காரணமாக எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் வீடுகளுக்குள் மழைநீருடன் கழிவுநீரும் புகுந்துள்ளதால் அப்பகுதி மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இதன்காரணமாக சுகாதார சீர்கேடு ஏற்பட்டு நோய்த்தொற்று வரக்கூடும் என்பதால் கால்வாய்களின் அடைப்பை சரிசெய்து தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டம் அரூர் பகுதியில் கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ரே சதீஷ் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வுசெய்தார்.

மழைநீர் அப்புறப்படுத்தும் பணிகளை விரைவுப்படுத்த அவர் உத்தரவிட்டார்.

இதனிடையே மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திருவண்ணாமலை மலையடிவார பகுதியில் தடுப்பு சுவர்கள் கட்டப்பட்டு மேற்கொள்ளப்படும் சீரமைப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தர்ப்பகராஜ் இன்று ஆய்வுசெய்தார்.

சென்ற ஆண்டு பெஞ்சல் புயலின் போது மண் சரிவு ஏற்பட்ட இடத்தின் மண்ணின் தன்மை குறித்தும் அவர் கேட்டறிந்து முன்னேற்பாட்டு பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

திருப்பூர் மாவட்டம் திருமூர்த்திமலை பகுதியில் தொடர் கன மழை காரணமாக பஞ்சலிங்க அருவிக்கு நீர்வரத்து அதிகரித்து காட்டாற்று வெள்ளம் கோவில் வளாகத்தை சூழ்ந்துள்ளது.

இதன்காரணமாக கோவில் நடை அடைக்கப்பட்டு தொடர் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

இருவரி

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சித்தலைவர் திரு. பிரவீன்குமார் முன்னிலையில் சிறுபான்மையினர் நலன் குறித்த

கோரிக்கைகள், நலத்திட்ட செயலாக்கம் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

❖❖❖❖❖❖❖

**கோவில்**

**திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி முருகன்** கோவிலில் கந்தசஷ்டி விழாவை ஒட்டி நடைபெறும் சிறப்பு பூஜை நேரத்தில் பக்தர்களுக்கு அனுமதி இல்லை என கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**அடிலைடில் இந்தியாவிற்கு எதிரான** இரண்டாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் 265 என்ற வெற்றி இலக்குடன் விளையாடும் **ஆஸ்திரேலியா** சற்றுமுன் 6 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 16 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக டாஸ் வென்ற ஆஸ்திரேலியா இந்தியாவை பேட்செய்ய பணித்தது.

ரோஹித் ஷர்மா 73 ரன் குவித்து ஆஸ்திரேலியாவிற்கு எதிராக ஒருநாள் போட்டிகளில் ஆயிரம் ரன் எடுத்த முதல் இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**மகளிர் கிரிக்கெட்**

**உலக கோப்பை மகளிர் ஒருநாள் சர்வதேச** கிரிக்கெட் போட்டியில் இந்தியா நியூசிலாந்தை நவி மும்பையில் இன்று எதிர்கொள்கிறது.

புள்ளிகள் பட்டியலில் தற்போது 4-வது இடத்தில் உள்ள இந்தியா அடுத்த இரு போட்டிகளிலும் வெற்றி பெற்றால் மட்டுமே அரையிறுதிக்கு முன்னேறமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖